சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகம்,
உத்தரமேரூர்
நாள்.28.03.2022

ந.க.எண்.450/2021/அ1

# மறுஒப்பந்தப்புள்ளி அறிக்கை

1998ம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்
(தமிழ்நாடு சட்டம் 43/1998 மற்றும் விதிகள் 2000ன் கீழ்)

உத்தரமேரூர் பேரூராட்சிக்காகவும் அதன் சார்பாகவும் உத்தரமேரூர் பேரூராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 2021–2022 ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13–ந் தேதி புதன்கிழமை (13.04.2022) பிற்பகல் 3–00 மணி வரை பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் பிற்பகல் 3–30 மணியளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் வைப்புத் தொகை உத்தரமேரூர் பேரூராட்சி அலுவலகத்தில் 12.04.2022 செவ்வாய்க்கிழமை மாலை 3–00 மணி வரையில் ரொக்கமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விவரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்–2021–22

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | முன்வைப்பு தொகை 1% ரூ. | ஒப்பந்த புள்ளி படிவத்தின் விலை. ரூ. |
|---|---|---|---|---|
| 1 | உத்தரமேரூர் பேரூராட்சியில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பழுதுபார்த்தல் பணி (ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளவு 2 எண்ணிக்கை, 2இலட்சம் லிட்டர், 3.50 இலட்சம் லிட்டர், 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள்) | 18,00,000/– | 18,000/– | 6720/– |
| 2 | கருங்குட்டை சுடுகாடு, நல்லூர் சுடுகாடு, நல்லூர் காலனி, இந்து சுடுகாடு மற்றும் வேடபாளையம் ஆகிய சுடுகாடுகளில் ஏற்கனவே உள்ள சுற்றுச்சுவர்கள் பழுதுபார்த்தல் பணி. | 18,00,000/– | 18,000/– | 6720/– |
| 3 | உத்தரமேரூர் பேருந்து நிலையம் பழுதுபார்த்தல் பணி | 8,00,000/– | 8000/– | 1680/– |

## நிபந்தனைகள்

01 தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 43/1998 மற்றும் விதிகள் 2000ம்படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.

02 ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன் பேரூராட்சி அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரி படிவத்தில் ரூ.20/–மதிப்புள்ள அரசு முத்திரை தாளில் ஒப்பந்தம் செய்து தருவதுடன் மேற்படி வேலைக்கான மப்பீட்டின் படி 1 % விழுக்காடு வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். மீதமுள்ள 4% விழுக்காடு வைப்புத் தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

03 மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர் குறைந்த பட்சம் ஐந்தாண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

04 வேலைகள் நடைபெறும் போது உயர் அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் கட்டிட பொருட்கள் தரம் தொடர்பாக சான்று கோரப்படும் போது பெற்று தர ஒப்பந்ததாரர் கட்டுப்பட்டவராவார்.

05 வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை (Deposit) பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

06 ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.

07 பட்டியல் தொகையில் கூடுதல் வைப்புத் தொகை 4%, வருமானவரி 1 %,GST(TDS 2%) பிடித்தம் செய்யப்படும்.

08 ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் மட்டும் பெற்றுக்கொள்ளப்படும்.

09 ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகே வேலைக்கான உத்தரவு வழங்கப்படும். மேலும் பணி தொடங்குவதற்கு முன்பும், பணி நடைபெறும்போதும், பணி முடிந்த பின்பு புகைப்படம் எடுத்து அதன் நகல் இவ்வலுவலகம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

10 அடித்தல், திருத்தலின்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பிணை வைப்புத் தொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படும்.

11 பேரூராட்சியில் ஏற்கனவே பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் பொறியியல் நடைமுறை நூலில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் கண்டுள்ள விவரங்கள் முறையாக பூர்த்தி செய்து அசல் செல்வ நிலை சான்றிதழ்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12 வேலைகள் முடிவு பெற்ற பின் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் அவர்களின் அளவுகள் மேல் அளவுகள் அளவு புத்தகத்தில் பதிவு செய்து மேலொப்பம் வழங்கிய பின்னரே அதற்கான பட்டியல் தொகை வழங்கப்படும்.

13 ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.

14 மதிப்பீட்டுத் தொகையில் 1 % கட்டுமானத் தொழி லாளர் நல நிதி பிடித்தம் செய்யப்படும்.

28/3/22

செயல் அலுவலர்
உத்தரமேரூர் பேரூராட்சி
காஞ்சிபுரம் மாவட்டம்

28/3/2022

பெறுநர்

1. பேரூராட்சியில் பதிவு செய்த அனைத்து ஒப்பந்ததாரர்கள்.

நகல்.

1. உத்தரமேரூர் சட்டமன்ற உறுப்பினர், (இ) சாலவாக்கம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
4. தலைவர், துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர் தகவலுக்கு.
5. அலுவலக விளம்பர பலகைக்கு